පරිපාලන කටයුතු පිළිබඳ පාර්ලිමේන්තු කොමසාරිස් (ඔම්බුඩ්ස්මන්) කාර්යාලය
நிருவாகத்துக்கான பாராளுமன்றஆணையாளர் அலுவலகம் (ஒம்புட்ஸ்மன்)
**OFFICE OF THE PARLIAMENTARY COMMISSIONER FOR ADMINISTRATION (Ombudsman)**

පළමු මහල, අංක:14, ආර්.ඒ.ද මෙල් මාවත, කොළඹ 04.
முதலாவது மாடி, இல -14 ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு - 04.
First Floor, No: 14 R.A.De Mel Mawatha, Colombo 04, Sri Lanka.

කොමසාරිස් / ஆணையாளர் / Commissioner 011-2588982
පරිපාලන නිලධාරි / நிருவாக உத்தியாகத்தர் / Administrative Officer 011-2585896
කාර්යාලය / அலுவலகம் / Office 011-2588798
ෆැක්ස් / பக்ஸ் / Fax 011-2501126

---

මගේ අංකය: / எனதுஇல: / My No:

ඔබේ අංකය: / உமது இல: / Your No:

දිනය: / திகதி: / Date 2018.12.31

2016 ஆம் ஆண்டின், 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்திற்கு அமைய நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் ( ஒம்புட்சுமான் ) அலுவலகத்தினால் வழங்கப்பட்ட தகவல் தொடர்பான வருடாந்த அறிக்கை - 2018

அ) வருடத்தில் பெற்றுக்கொண்ட கோரிக்கைகளின் மொத்த தொகையும் வழங்கப்பட்ட மற்றும் மறுக்கப்பட்ட தகவல்களின் அளவும்

தகவல் கோரிக்கைகளின் மொத்த தொகை - 8

வழங்கப்பட்ட தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை - 4

மறுக்கப்பட்ட தகவல்களின் எண்ணிக்கை - 4

ஆ) இவ்வாண்டில் பெற்றுக்கொண்ட கட்டணங்களின் தொகை

இல்லை

இ) பிரிவு 5 இன் கீழ் மறுக்கப்பட்ட தகவல் கோரிக்கைகளின் தொகை

இல்லை

(ஈ) ஆணைக்குழுவின் பணிப்புக்கு அமைய தகவல்கள் வழங்கப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை

இல்லை

(உ) வெளிப்படைத்தன்மை என்னும் ஆட்சி திறனை மேம்படுத்துவதற்கான ஏதாவது ஆலோசனைகள்

இல்லை

(ஊ) தகவல் தொடர்பாடல் செய்வதற்கு மறுக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை

02

(எ) அறிக்கைகளை பேணுதல், முகாமை செய்தல், அழித்தல் தொடர்பான செயற்பாடுகள்

2011.12.31 ஆம் திகதிக்கு முன்னர் திறக்கப்பட்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டு செயற்பாடுகள் முடிவுறுத்தப்பட்ட கோவைகள் யாவும் அழிக்கப்பட்டன. 2012.01.01 ஆம் திகதியிலிருந்து திறக்கப்பட்டு இவ்வலுவலகத்தில் பேணப்பட்டு வரும் சகல கோவைகளும் இச்சட்டம் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து சரியான முறையில் பேணப்பட்டு வருகின்றன. 10 வருடங்களுக்குப் பின்னர் அக்கோவைகள் அழிக்கப்படும்.

(ஏ) அரசாங்க அலுவலர்களால் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள். உள்ளூராட்சி அதிகாரசபை மற்றும் அதேபோன்ற ஏனைய நிறுவனங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் தமது கடமைகளை நிறைவேற்றும் போது அடிப்படை உரிமைகள் மீறல் அல்லது ஏனைய அநீதிகள் தொடர்பிலான முறைப்பாடுகளை அல்லது சார்த்துரைகளை புலனாய்வு செய்து அறிக்கையிடும் பொறுப்பை கொண்டுள்ள நிருவாத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) அலுவலகத்தை பாராளுமன்றம் தாபித்தல் வேண்டும் என இலங்கை குடியரசின் அரசியலமைப்பு உறுப்புரை 156 குறித்துரைக்கிறது.

அதற்கமைய, 1994 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்திற்கு அமைய ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அரசாங்க அலுவலரகளால் இழைக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மற்றும் ஏனைய அநீதிகள் தொடர்பில் எழுத்து மூலம் நேரடியாக ஒம்புட்சுமானுக்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் அல்லது சாத்துரைகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரொருவரால் பாராளுமன்ற பொதுமனுக்கள் குழுவின் ஊடாக கௌரவ சபாநாயகருக்கு முன்வைத்து அவரினால் இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் என்பவற்றை புலனாய்வு செய்து பரிந்துரை வழங்குதல்.

பயனாளிகள்

| | |
|---|---|
| சகல அரசாங்க அமைச்சுக்கள்<br>திணைக்களங்கள்<br>அரசாங்க கூட்டுத்தாபனங்கள்<br>சபைகள்<br>அரசாங்க வங்கிகள்<br>மாகாண பொதுசேவைகள்<br>உள்ளூர் அதிகாரசபைகள் | மூலம் அநீதிக்கு உட்பட்ட பொதுமக்கள் |